DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 64/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 3 |
| Name | செல்லப்பாண்டி |
| Father / Husband Name | வேலாயுதம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் பேச்சாந்தங்குடி. நான் தற்சமயம் சிற்ப வேலை செய்து வருகின்றேன். சம்பவ சமயம் நான் சிவகங்கை மானாமதுரை ரோட்டில் கிறிஸ்தவ கல்லறைத்தோட்டம் அருகே கறிக்கடை வைத்து நடத்தி வந்தேன். கடந்த 29.09.2015 ம் தேதியன்று காலை 09.15 மணிக்கு நான் கறிக்கடையில் இருந்த போது என்னுடன் அ.சா. 2 என் அக்கா இருந்தார். விபத்தில் இறந்த நபர் என் அக்கா மகன் வாய்பேச முடியாதவர்.

2) என் அக்கா மகன் ரோட்டு ஓரமாக நடந்து வந்துகொண்டிருந்த போது சிவகங்கை - மானாமதுரை ரோட்டில் மானாமதுரை நோக்கி Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்தவர் என் அக்கா மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். விபத்தை நானும், என் அக்காவான அ.சா. 2ம் நேரடியாக பார்த்தோம். விபத்தை ஏற்படுத்திய நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. என் அக்கா மகனுக்கு நெஞ்சிலும், கை, கால்களிலும் அடிபட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

3) என் அக்கா மகனை நானும், என் அக்காவும் அந்த வழி யாக வந்த போக்கு வண்டியில் ஏற்றி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதற்குள் அ.சா.1க்கு போனில் தகவல் தெரிவிக்கப்பட்டு அவரும் வந்தார். என் அக்கா மகனுக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர் 13 நாட்கள் கழித்து என் அக்கா மகன் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் நான் உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என் அக்கா மகனின் பிரேதத்தை பிரேத விசாரணைக்கு பின் எங்களிடம் ஒப்படைத்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எனக்கு சிவகங்கையில் வீடு இல்லை என்றால் சரிதான். என் ஊருக்கும், சிவகங்கை எவ்வளவு தூரம் என்றால் 12 கி.மீ. இருக்கும். என் அக்கா வீடு எங்கு உள்ளது என்றால் தற்சமயம் இந்திராநகரில் உள்ளது சம்பவ சமயம் கீழவாணியங்குடியில் இருந்தார். சம்பவ சமயம் அ.சா.2ன் வீடு சிவகங்கை - மானாமதுரை ரோட்டில் கிழக்கு புறமாக இருந்தது என்றால் ஆமாம். ரோட்டில் இருந்து 7, 8 வீடுகள் தள்ளி இருக்கும் என்றால் ஆமாம். எனது கறிக்கடை கல்லறைத்தோட்டத்தை ஒட்டியே உள்ளது என்றால் சரிதான்.

2) விபத்து சம்பந்தமாக விபத்து நடந்த அன்றே புகார் கொடுக்கப்பட்டதா என்றால் மருத்துவமனையில் வைத்து கொடுக்கப்பட்டது. அந்த புகார் சம்பந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என எழுதிக்கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அச்சமயம் எதிரி தரப்பில் மருத்துவ

செலவினங்களுக்காக ரூ. 20,000/- கொடுத்தார்கள் அதற்காக மட்டும் எழுதிக்கொடுத்தோம்.

3) விபத்து நடந்த பின்னீடு எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும், என் அக்கா மகன் தான் குறுக்கே வந்து விபத்தில் சிக்கிக்கொண்டார் என்பதால் நடவடிக்கை வேண்டாம் என நானும், அ.சா. 1ம் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்துவிட்டு தற்சமயம் எழுதிக்கொடுக்கவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்து என் கறிக்கடைக்கு எவ்வளவு தூரத்தில் நடந்தது என்றால் 10 -15 அடி இருக்கும்.

4) நான் சம்பவ சமயத்தில் கறிக்கடை வைத்திருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், இறந்த நபர் என் அக்கா மகன் என்பதால் அ.சா. 1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றாலும், என் அக்கா மகன் தான் குறுக்கே வந்து விபத்தில் சிக்கிக்கொண்டார் என்றாலும் சரியல்ல. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த அன்று மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் அதன் பிறகு விசாரிக்கவில்லை. என் அக்கா மகன் இறந்ததற்கு பிறகு கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் எனக்கு தெரியாது.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 22.06.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**